ரேஷன் கார்டுக்கு ரூ.5,000

புதுச்சேரி அரசு அதிரடி

புதுச்சேரி, மார்ச் 5–

தமிழகத்தை பின்பற்றி, புதுச்சேரியிலும் ரேஷன் கார்டுக்கு ரூ.5,000 செலுத்தப்படும் என கவர்னர் கைலாஷ்நாதன் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநிலங்களில் அடுத்த மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. அதனை யொட்டி, ஆளும் கட்சியினர் அதிரடியாக பல்வேறு திட்டங்களையும் அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகின்றனர்.

அதன்படி தமிழக அரசு, கடந்த பொங்கல் பண்டிகைக்கு ரேஷன் கார்டுக்கு ரூ.3,000 வழங்கியது. அதனைத் தொடர்ந்து புதுச்சேரியில் ஆளும் கட்சியான என்.ஆர்.காங்., – பா.ஜ., கூட்டணி அரசு, ரேஷன் கார்டுக்கு ரூ.3,000 ரொக்கம் மற்றும் ரூ.750 மதிப்புள்ள பொங்கல் தொகுப்பு வழங்கியது.

இந்நிலையில் தமிழக அரசு, குடும்ப தலைவி களுக்கு வழங்கி வரும் மாதாந்திர உரிமைத் தொகை, தேர்தல் அறிவிப்பு வெளியானால் தடைபடும் என்பதற்காக மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மூன்று மாதங்களுக் கான தொகை ரூ.3,000 மற்றும் கோடைக்கால நிவாரணமாக ரூ.2,000 சேர்த்து மொத்தம் ரூ.5,000ஐ உரிமைத் தொகை பெறும் பயனாளிகளின் வங்கி கணக்கில் அதிரடியாக செலுத்தியது.

அதனைத் தொடர்ந்து முதியோர், விதவை மற் றும் மாற்றுத் திறனாளிக ளுக்கும், மூன்று மாதத்திற் கான உதவித் தொகையை முன்கூட்டியே வங்கி கணக்கில் செலுத்தியது.

தமிழக அரசின் இந்த அதிரடி நடவடிக்கை, புதுச்சேரி மக்களிடமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இதுதொ டர்பாக கடந்த 1ம் தேதி புதுச்சேரிக்கு வருகை தந்த பிரதமர் அறிவிப்பார் என மக்கள்ஆர்வமுடன் எதிர்பார்த்தனர். ஆனால், அதுகுறித்து பிரதமர் எது வும் பேசாதது மக்களி டையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

அதனை அறிந்த முதல் வர் ரங்கசாமி, நேற்று கவர்னரை சந்தித்து, தமிழ கத்தை பின்பற்றி புதுச்சேரி கும்பிடு தலைவிகளுக் கும் நிறப்பு நிதி வழங்க வலியுறுத்தினார். அதற்கு கவர்னர் கைலாஷ்நாதன், நிதி ஆதாரமில்லை எனக் கூறினார்.

இந்நிலையில், நேற்று இரவு 7:30 மணிக்கு, தனது முகநூலில், இன்ப அதிர்ச்சி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அதில், புதுச்சேரி மாநி லத்தில் வறுமை கோட் டிற்கு கீழ் உள்ள (சிகப்பு ரேஷன் கார்டு) 63 ஆயிரம் குடும்ப தலைவிகளுக்கு, அவர்களின் குடும்ப தேவைகளை கருத்தில் கொண்டு அடுத்த 2 மாதங்களுக்கான மாதாந் திர நிதியுதவி (மாதம் ரூ.2,500 வீதம்) மொத் தம் ரூ.5,000 வழங்கப்பட உள்ளது. இந்த தொகை, நேரடி நிதி பரிமாற்ற முறை யில், எந்த தடையின்றி பய னாளிகளின் வங்கி கணக் கில் வரவு வைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும், ஒரு குடும் பத்தின் முன்னேற்றம் அந்த வீட்டின் பெண் ணின் கைகளிலேயே பெரும் இன்பஅதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஜாக்பாட்

முதல்வர் ரங்கசாமி, நேற்று மதியம் கவர்னரை சந்தித்து பேசியபோது மூன்று கோப் புகளுக்கு அனுமதி கோரினார். அதில், ஆஷா பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, கூடுதலாக 300 ஆஷா பணியாளர்கள் நியமனம், வாரிசு களுக்கு வேலை, ரேஷன் கார்டிற்கு சிறப்பு நிதி கோரினார். நிதி ஆதாரமில்லை என கைவிரித்த கவர்னர், கூடுதலாக 300 ஆஷா பணியாளர்கள் நியமித்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளார். இதனால், தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக ஆஷா பணியாளர்கள் நியமிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

BRAHMINS SUYAMVARAM
(Iyer - Iyengar - Madhwa - Telugu - Gurukkal)
08.03.2026, Sunday 9.00 am to 1.00 pm
Venue: Pakshi R Gopalan Chettiyar Mandapam
Thiruvanthipuram Road, Ramanathan Nagar,
Koothapakkam, **CUDDALORE**
Details
93631 56520 / 98942 82865
Entrance / Participation free

Vencobb
Vencobb No. 1 Tastiest Chicken
வென்காப் சிக்கன்
நேற்றைய பண்ணை கொள்முதல் விலை 144
சராசரி எடை 1.70 கிலோ கிழ் உள்ள கோழிகளுக்கு ரூ.3 கூடுதல் விலை
today's Suggested Retail price per Kg
நேற்று உள்ள கறி ₹239 | நேற்று நீக்கிய கறி ₹258

OFFICE OF THE COMMISSIONER
NETTAPAKKAM COMMUNE PANCHAYAT
NETTAPAKKAM.
F.No.1-21/Works/NCP/e-Tender/2025-26 Date : 04.03.2026
PRESS NOTICE FOR TENDER
On behalf of the Nettapakkam Commune Panchayat Council, Percentage Rate tenders are invited through e-Tendering System for Five **(5) works** upto 2.00 pm on 11.03.2026. The terms & Conditions and N.I.T. can be downloaded from the Website: **https://pudutenders.gov.in**
-s/d-
C. RAMESH,
COMMISSIONER
NETTAPAKKAM COMMUNE PANCHAYAT
No.902/ DIP/AD(Press) /2025-26

பொது அறிவிப்பு

புதுச்சேரி-605 005, எல்லைப்பிள்ளைச்சாவடி, தந்தை பெரியார் நகர் மெயின் ரோடு, 2வது குறுக்கு எதிரில், 20-ஆம் எண் கொண்ட இல்லமனை இல்லம் என்கிற வீட்டில் வசிக்கும் காலஞ்சென்ற வஸ்புமனன் அவர்களின் குமாரர் L. பெரியசாமி (ஜகபெர் எண். 97904 60121) ஆகிய எனது கட்சிக்காரரின் அறிவுறுத்தலின் பேரில் சகலமானவர்களுக்கும் தெரிவிக்கும் பொது அறிவிப்பு என்னவெனில்,

கீழ்க்கண்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்தானது 15-12-1998-ல் எழுதி, பாண்டிச்சேரி மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில், 18-12-1998-இல், புத்தகம்-1, வால்யூம் 1574, பக்கங்கள் 49 முதல் 52 வரையில் ஆவண என். 6286/1998-ஆம் எண்ணாக பதியப்பட்ட கிரயப்பத்திரப்படி, எனது கட்சிக்காரர் பெயரில் கிரயம் பெற்ற சொத்தாகும். எனது கட்சிக்காரர் கடந்த 16-02-2026 தேதியில் காலை 11 மணியளவில் புதுச்சேரி-7, அரியாங் குப்பம், மார்க்கெட் அருகில் ஜெராக்ஸ் கடைக்கு ஜெராக்ஸ் எடுக்கச் செல்லும் போது வழியில் மேற்படி கிரயப் பத்திரம் ஆவண என். 6286/1998 கொண்ட பத்திரத்தின் ஒரிஜினலை, எனது கட்சிக்காரர் தவற விட்டுவிட்டார். மேற்படி ஒரிஜினல் பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் மேற்படி எனது கட்சிக்காரரின் முகவரியில் ஒப்படைக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி மேற்சொன்ன ஆவணம் இந்த பொது அறிவிப்பு வெளியிட்ட இன்றைய தேதியிலிருந்து பத்து (10) நாட்களுக்குள் கிடைக்கவில்லை என்றால் அதற்குண்டான நகலை எடுத்து, அதனை வைத்து பத்திரம் பதியவும் மற்றும் அனைத்து காரியங்களுக்கும் எனது கட்சிக்காரர் பயன்படுத்திக்கொள்வார் மற்றும் கிரயம் செய்ய முன் வருபவர்களுக்கு, கிரயம் செய்து கொடுத்து விடுவார், என்பதை இந்த பொது அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்து விபரம்

SCHEDULE 'A' OF THE PROPERTY Situated in Registration & Sub-Registration District of Pondicherry in Pudupalayam Village No.37, Mudaliarpet Commune, Anna Nagar, Pondicherry Municipality in Cadastre No.1459Pt & 1550, R.S.No.6/3, 6/4 measuring North-South 37 Feet, East-West on the Southern side 53 Feet, Northern side 60 Feet situated to the East of Sarada Madam, West of the Road, South of the land belonging to Govindaraman and North of the land belonging to Kalki Sundarama Reddy, having a total extent of 2110 Sq.ft. The adjacent property measuring East to West 60 Feet, North to South 30 Feet lying to the South of the above property having a total extent of 1800 Sq.ft. and situated in Ward-H, Block No.2. T.S.No.26, R.S.No. 6/3 and/6/4, Cadastre No.1550 and Patta No.2025 **SCHEDULE 'B' OF THE PROPERTY** A Flat bearing No. 'A' on the First Floor with a total extent of 965 Sq.ft., of which the plinth area of the flat (inclusive of balcony) is 790.10 Sq.ft., and the common area is 174.90 Sq.ft.

V.TAMILARASAN, B.Com.,DDW.,LLB., Advocate,
No.5, 1 Cross St, Sakthi Nagar, Saram, Puducherry-13. Cell: 91592 92007.

சாந்து தீர்வாணம், நெய்வேலி.
M.C.O.P.No.27/2024
ரமேஷ், த/பெ. கலியபெருமாள், எ.ந. 1252/4, ஏ.குறவன்குப்பம், பெரியார் குறிச்சி, நெய்வேலி, விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்-607 802.
- மனுதாரர்
எதி
ஆறுமுகம், எ.ந. 25, பிரமாணர் தெரு, வில்லியனூர், புதுச்சேரி மற்றும் 2 நபர்கள்.
- எதிர்மனுதாரர்கள்
மேற்படி மனுதாரருக்கு அறிவிப்பு
மேற்படி வழக்கு எண். M.C.O.P.No.27/2024 கடந்த 21.01.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது நீர் ஆஜராகவில்லை என்றும் தற்போது வழக்கு மீண்டும் 25.03.2026ஆம் தேதியன்று விசாரணைக்கு வருகிறது என்றும் அதுசமயம் நீர்தா அல்லது வழக்காடுதர் மூலமாகவோ 25.03.2026 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகும் படியும். தவறும்பட்சத்தில் வழக்கு ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.
VK.முருகவேல், B.A.,LL.B.,
வழக்கறிஞர்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
நெய்வேலி.
செல்: 96295 30978, 94423 00978.

IN THE COURT OF THE HON'BLE PRINCIPAL SUBORDINATE JUDGE AT TINDIVANAM,
I.A.No.101 and 102 of 2024 IN
A.S.No.43 of 2024
D.Murugan. - Petitioner / Appellant
Vs
J.Jaisankar, Son of Jayaraman (died), Old No.55 New No.15, victoria Nagar Extension, Victoria Nagar, Puducherry-605 005.
- 4th Respondent / Defendant
Take notice that in the above appeal Suit, in respect of the above two interlocutory Applications, the Hon'ble Court by order dated 24.02.2026, has directed substituted service by way of newspaper publication. You, the 4th Respondent / Defendant, being the legal heir of the deceased 1st Respondent (Late Jayaraman), residing at Old No.55, New No.15, Victoria Nagar Extension, Victoria Nagar, Puducherry-605 005, are hereby called upon to appear before the Hon'ble Court on 25.03.2026 at 10.00 am Take further notice that if you fail to appear either in person or through Counsel on the said date, the matter will be heard and decided in your absence and ex parte, in accordance with law.
Dr.T.C.MOHANAM, Advocate,
93454 50577.

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
பாண்டிச்சேரி கிளை
எண்.58-60, ரவிகிருஷ்ணா இன், வெள்ளாழ தெரு, பாண்டிச்சேரி-605 601.
போன்: 0413-2336812, Mail ID: pondic@bankofbaroda.bank.in
(baanknet போர்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செயற்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை IV-A(மின்பபடி (விதி 6(2) மற்றும் 8(6)வை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** கன்சீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கையாளப்பட்டவை கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேப்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
M/s. Transcool Systems and Appliances பிரதிநிதியான பங்குதாரர்கள் திருமதி. S.வசந்தி மற்றும் திரு. V.தினேஷ், எ.20, புதுமை மடம் தெரு, எல்லைப்பிள்ளைச்சாவடி, புதுச்சேரி - 605 005 மற்றும் திருமதி. S.வசந்தி த/பெ. ராஜகோபால் (பங்குதாரர்), எ.34, பிள்ளையார் கோவில் தெரு, குயவர்பாளையம், பாண்டிச்சேரி - 605013. மற்றும் திரு. V.தினேஷ் த/பெ. வெங்கடேசன், எ. 100A, தரிசாபதி அம்மன் கோவில் தெரு, பெருமுக்கல், திண்டிவனம் தாலுக்கா, தமிழ்நாடு - 604 301

1. Term Loan A/c.No.05640500045656 நிலுவை தொகை ரூ.**44,10,448.34/-** மேலும் **28.02.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
28.02.2026 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ.**44,10,448.34/-**

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின்
சொத்து எண் 1: புதுச்சேரி பதிவு மாவட்டம், புதுச்சேரி சார் பதிவு மாவட்டம், புதுச்சேரி நகராட்சி, முதலியார்பேட்டை கொம்பூன், புதுமனையம் வருவாய் கிராமம், வ்ரு. 37, சென்னை பெருமாள் கோவில் தெரு, கிழக்கில் இருந்து மேற்காக 13 அடி அளவும், தெற்கில் இருந்து வடக்காக 64 அடி, பரப்பளவு 851 சதுரஅடி, RCC வீடு, மனுப்படி கதவு எண் 7/43, புதிய கதவு எண். 22, வார்டு H, வட்டம் எண்.9, பவுன் சர்வே வ்ரு. 42, சர்வே வ்ரு. 44/2, கதாஸ்தர் வ்ரு. 334pt, பட்டா வ்ரு. 2476ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள்:** செல்லப் பெருமாள் கோவில் தெருவிற்கு வடக்கு, பெரியசாமி பிள்ளை வீட்டிற்கு கிழக்கு, கோவிந்தசாமி பிள்ளை வீட்டிற்கு தெற்கு, மஹாலட்சுமி வீட்டிற்கு மேற்கு. இந்த சொத்தானது **திருமதி. S.வசந்தி த/பெ. ராஜகோபால்** வங்கிக்கில் பெயரில் உள்ளது.
கவனிக்க நிலை : ஆக்கபூர்வ நிலை

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 68,00,000/-	டேவணித் தொகை	ரூ. 6,80,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **10.04.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
சொத்தினை பார்வையிடும் தேதி : 20.03.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 09.04.2026
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **Baanknet.com** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏதேனும் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 93296 11020 & 95150 24578 தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 04.03.2026
இடம் : புதுச்சேரி
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர் / பேங்க் ஆஃப் பரோடா

ரமலானை முன்னிட்டு நலத்திட்ட உதவி

ஜோஸ் சார்லஸ் மார்டின் வழங்கல்



■ லட்சிய ஜனநாயக கட்சியின் மாநில சிறுபான்மை பிரிவு சார்பில், ரமலானை முன்னிட்டு நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் இஸ்லாமிய மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

புதுச்சேரி, மார்ச் 5–

லட்சிய ஜனநாயக கட்சியின் மாநில சிறுபான்மை பிரிவு சார்பில் ரமலானை முன்னிட்டு மகளிருக் கான நலத்திட்ட உதவிகள் வழங் கும் நிகழ்ச்சி சாய்பாபா திருமண மண்டபத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் தலைமை தாங்கி, இஸ்லாமிய மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில், அங்காளன் எம்.எல்.ஏ., ஜே.சி.எம்., மக்கள் மன்ற தலைவர் ரீகன் ஜான்குமார், மண்டல பொதுச்செயலாளர் விஜய்ராஜ், மாநில சிறுபான்மை பிரிவு தலைவர் அப்துல் வகாப், பொதுச் செயலாளர்கள் துரைராஜி, பூக் கடை ரமேஷ், பிரபாகரன், பாபு, பரப்புரை பொதுச்செயலாளர் தாடி பாலாஜி, மண்டல பொதுச் செயலாளர்கள் ரவி, கண்ணபிரான், ராபர்ட் ஜேகதாஸ், மாநில செயலாளர்கள் ரவி ராஜாராம், அனிதா, செய்தித் தொடர்பாளர் முகமது ஷஜிதா உட்பட பலர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் பேசுகையில், 'மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அரசியலில் ஈடுபட்டுள்ளேன். மக்களின் வாழ்க்கைத் தரம் வெளிநாடுகளைப் போல உயர வேண்டும். இளைஞர்கள் நன் றாக கல்வி கற்று, வேலைக்குச் சென்று குடும்பத்தை முன்னேற்ற வேண்டும். இங்கு, சாலைகள் முதல் வாய்க்கால்கள் வரை பல பிரச்சனைகள் உள்ளன. அனைத்து பிரச்சனைகளுக்கும் நீர்வு காண அர சியலுக்கு வந்துள்ளேன். மக்கள் ஆதரவு அளித்தால் முழு நேரமும் உழைக்கத் தயாராக இருக்கிறேன். வெளிநாடு போல புதுச்சே ரியை மாற்ற வேண்டும் என்பதே என் நோக்கம்' என்றார்.

புதுச்சேரி அரசு
துணை ஆட்சியர் மற்றும் துணை ஆணையர் (கலால்) அலுவலகம், புதுச்சேரி
No.2526/DCE/T(P)/2025-26 புதுச்சேரி: 03.03.2026
அறிவிப்பு
2025-26 ஆம் ஆண்டு சாராயக்கடைகள் மற்றும் கள்ளுக்கடைகளுக்கு காலக்கெடு முழுந்தும் அக்டோபர் 2025 மாத கிஸ்தி தொகை செலுத்தாத சாராயக்கடைகள் மற்றும் கள்ளுக்கடைகளுக்கு மறு ஏலம் அதே மாத குத்தகை விலையில் வருகின்ற 16.03.2026 (திங்கள்கிழமை) அன்று கீழ்கண்ட அட்டவணைப்படி **"exciseportal.py.gov.in/Auction"** என்ற இணையதள முகவரியில் நடைபெறும்.

கடைகள்	நேரம்	குறிப்பு
சாராயக்கடைகள் மற்றும் கள்ளுக்கடைகள்	பிற்பகல் **02.00** மணி முதல் **03.00** மணி வரை அல்லது ஏலம் கேட்பு தொடரும் வரை	புதுச்சேரி பகுதியில் அக்டோபர் 2025 மாத கிஸ்தி செலுத்தாத சாராயக்கடைகள் மற்றும் கள்ளுக்கடைகள்

மேற்கண்ட கடைகளின் விபரம் கலால்துறை அறிவிப்பு பலகையில் வெளியிடப்படும். ஏலம் கேட்க விழைவோர், பிணைத் தொகை மற்றும் நொடிப்பில்லா சான்றிதழுடன் கலால் துறையில் **16.03.2026** அன்று காலை **10.00** மணிக்குள் தங்கள் பெயரை பதிவு செய்துகொள்ளலாம்.
//ஆணையர் (கலால்) ஆணைப்படி//
No.903/DIP/AD(Press)/2025-26 **துணை ஆணையர் (கலால்), புதுச்சேரி**

பஸ் நிலைய கழிவறையில் மிளகாய் பொடி தூவி பெண்ணிடம் நகை திருட்டு

4 பெண்களிடம் போலீசார் விசாரணை

புதுச்சேரி, மார்ச் 5–

விழுப்புரத்தை சேர்ந்த சித்ரா, 55, என்பவர் நேற்று மாலை 5:00 மணிக்கு புதுச் சேரி புதிய பஸ் நிலையம் வந்தார். அங்குள்ள கழி வறைக்கு சென்றபோது, அவரை பின்தொடர்ந்து சென்ற 2 பெண்கள், கழிவறையின் உள்ளே சித்ராவை அடைத்து, முகத்தில் மிளகாய் பொடியை தூவி விட்டு, அவரது கழுத்தில் இருந்த 8 சவரன் நகைகளை திருடி சென்றனர்.

கழிவறையில் இருந்து வெளியே வந்த சித்ரா அழு தப்படி, பஸ் நிலைய புற காவல் நிலையத்தில் நகை திருடப்பட்டது குறித்து தெரிவித்தார். அதன்பே ரில், போலீசார் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி. டி.வி., கேமரா காட்சிகளை பார்வையிட்டபோது, திரு டில் ஈடுபட்டதாக சந்தே கப்படும் பெண்கள் கட லூர் செல்லும் தனியார் பஸ்சில் ஏறி செல்வது தெரியவந்தது.

இதையடுத்து, உருளை யன்பேட்டை போலீசார், நகையை திருடி கொண்டு பெண்கள் செல்லும் பஸ்சை நிறுத்தி, கைது செய்யப்பட்டனர். தகவல் தெரிவித்தனர். அதன் பேரில், கிருமாம்பாக்கம் போலீஸ் சப் இன்ஸ்பெக் டர் சண்முக சுப்பிரமணி மற்றும் போலீசார் கிருமாம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் எதிரே தனியார் பஸ்சை நிறுத்தி, நகைகளை திருடி சென்ற 2 பெண்களை பிடித்து சோதனை செய்தனர்.

அதில், பஸ் நிலையத் தில் கழிவறைக்கு சென்ற பெண்ணிடம் திருடிய நகையை பதுக்கி வைத் திருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, நகையை பறிமுதல் செய்த போலீசார், திருடிய 2 பெண்கள் மற் றும் உடந்தையாக இருந்த மேலும் 2 பேரை உருளை யன்பேட்டை போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து சித்ரா அளித்த புகாரின் பேரில், உ ருளையன் பேட்டை இன்ஸ்பெக்டர் கார்த்தி கேயன் மற்றும் போலீ சார் வழக்கு பதிந்து, நான்கு பெண்களிடமும் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

மிக துல்லியமான பஞ்சாங்கம் பார்ப்பது எப்படி?
ஒரு நாள்
ஒரு பக்கம்
எளிமையான
புத்தக வடிவில்
பராபவ வருஷத்திய
துல்லியமான திருக்கணித
பஞ்சாங்கம்
கணிப்பு :
பஞ்சாங்க கணித மணி
G. ஸ்ரீனிவாஸன் எம்.ஏ.,
(ஜோதிடம்)


472 பக்கம்
விலை ~~ரூ.280~~ சலுகை விலை ரூ.250
பணம் செலுத்த QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்
முன்பதிவுக்கு
75500 09565 Hi to 98940 09613
Toll Free: 1800 425 7700 (7:00 am to 7:00 pm)
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்